2. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

குடும்ப நல நிதி வழங்குவதற்கு கால வரையறை.

*3261 திரு. சா. கணேசன் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு ஊழியர் பணியில் இருக்கும்போது இறந்துவிடுபவர் குடும்பத்திற்கு குடும்ப நல நிதி வழங்குவதற்கு கால வரையறை நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

தலைவர் அவர்களே, இல்லை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கழக அரசால் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின் மூலம் இது வரை எத்தனை குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பணியில் இருக்கும்பொழுது இறந்து விடுகின்ற அரசு அலுவலர் களுக்குக் குடும்பப் பாதுகாப்பு நிதி உடனடியாக அளிப்பது என்ற இந்தத் திட்டம் 1974 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு, அந்த ஆண்டில் 934 குடும்பங்கள் இந்த பயனைப் பெற்று, படிப்படியாக, 1974 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு முடிய 36,132 அரசு அலுவலாளர் குடும்பங்கள் இந்தப் பயனைப் பெற்றிருக்கின்றன.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்டுப் பணியாற்றக்கூடிய அரசு அலுவலர்களுக்குக் கிரேடு-2 நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் சேரன்மாதேவி நகரப் பஞ்சாயத்தில் வசிக்கக்கூடிய, அதாவது யூனியன் அலுவலகம் சேரன்மாதேவியில் இருக்கிறது, நகரப் பஞ்சாயத்து எல்லையில் வசிக்கக்கூடிய அத்தனை அரசு ஊழியர்களுக்கும் கிரேடு-3 வீட்டு வாடகைப்படி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, யூனியனுக்கேற்ப நகரப் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டு வசிக்கக்கூடிய அரசு ஊழியர்களுக்குச் சமமாக வழங்கப்படுமா என்று முதலமைச்சரவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

1989 அக்டோபர் 31]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதுபற்றிய ஒரு கோரிக்கை முதலமைச்சர் அலுவலகத்திற்கும் அங்கிருந்து அனுப்பப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, இறந்த அரசு ஊழியர்களின் குடும்பத்திற்கு நிதி வழங்குவதற்காகப் பாக்கியுள்ள, நிலுவையிலுள்ள நேர்வுகள் எத்தனை? அப்படி நிலுவையில் இருக்கக்கூடிய நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக அதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்படுவது உதவிகரமாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதற்குக் காலவரையறையே இல்லாமல் உடனடியாகக் கொடுத்து விட வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். அதற்கேற்பத்தான் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நிலுவையில் ஒன்றிரண்டு இருந்தாலும், நினைவூட்டப்பட்டால் உடனடியாக அந்தக் குறை போக்கப்படும்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழக முதல்வரவர்கள் காலவரையறை தேவையில்லை; உடனடியாகக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் ஒரு வருஷமாகியும்கூட இன்னும் சில அரசு ஊழியர் இறந்த குடும்பங்களுக்கு உதவி அளிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதையும் விரைவாக வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(9-05)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மரணம் குறித்து ஏதாவது ஐயப்பாடுகள் இருக்குமானால் அதுபோன்ற காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். அதைத் தவிர காலதாமதம் ஏற்படுவதற்கு வேறு மார்க்கமே இல்லை. அப்படி ஏதாவது ஒன்றிரண்டு இருக்குமானால் அவை சுட்டிக்காட்டப்பட்டால் அந்தக் குறை நீக்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் வேலையில் இருக்கும்போது இறந்துபோனால் அவர் களின் குடும்பங்களுக்குப பண உதவி கொடுப்பது மட்டுமின்றி அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுக்கும் திட்டமும் இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் எலக்ட்ரிசிட்டி போர்டில் அதிகமான வாரிசுகளுக்கு வேலை கொடுக்கப்படவில்லை என்று புகார் இருக்கிறது. அதுபோன்று பல டிபார்ட்மெண்டுகளில் சொல்கிறார்கள். அதை அரசு அறியுமா? இறந்துபோன அத் தகைய ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலை கொடுக்க அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அத்தகைய பணிகள் தரப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று இருக்கிறது. அந்த முன்னுரிமை வழங்கப்படுகிற முறையி லிருந்து எந்த மாற்றமும் இல்லையென்றே நான் கருதுகின்றேன்.

திரு. செ. நூர்முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, நிரந்தர அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற இப்படிப்பட்ட குடும்ப நல நிதியுதவி என்.எம்.ஆர். போன்ற, நிரந்தரப்படுத்தப் படாமல் இருக்கிற ஊழியர்கள் இறந்தாலும், அவர்களது குடும்பங் களுடைய சிரமங்களைக் கருத்தில் கொண்டு, அக்குடும்பத்தின ருக்கும் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு அலுவலர் பணியில் இருக்கும்போது இறந்து விட்டால் உடனடியாக 40,000 ரூபாய் தரப்படும் என்று அறிவித்து, அந்த வாக்குறுதி காப்பாற்றப்பட்டுள்ள நிலையில் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆகிற அதிகச் செலவு ஐந்து கோடியே இருபது லட்சம் ரூபாய் ஆகும். இது நிரந்தரமாக பணியில் இருப்பவர் களுக்குத் தரப்படுகிறது. இது நிரந்தரமாகத் தரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நிரந்தரமாக இல்லாதவர்களுக்குத் தரப்பட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதியுதவி உடனடியாக வழங்கப்

1989 அக்டோபர் 31]

படுகிறது என்று சொன்னார்கள். அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்தால் அவர்களுடைய வைப்பு நிதி போன்றவை எல்லாம் வழங்கப்படுவதில் பல ஆண்டுகள் தாமதம் ஆகிறதே, அதற்கு ஒரு வரையறை வைத்து, அப்படி இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு குறிப்பிட்ட காலத்திற்குள் அவை கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வெளியிட்டுள்ள இந்தக் கருத்துக்கள் நிச்சயமாக அரசின் கவனத்தில் கொள்ளப்பட்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். சாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறையில் பணியாற்றுகிற காவலர்கள், சமையல்காரர்கள், பகுதி நேர ஆசிரியர்களுக்கு இந்தக் குடும்ப நலத் திட்டம் பயன்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதற்குப் பதில் அளித்து இருக்கிறேன். நிரந்தரப் பணியாளர்களுக்கு மாத்திரம்தான் இந்தத் திட்டம்.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கும், உள்ளாட்சித் துறை ஊழியர்களுக்கும் 1974 ஆம் ஆண்டிற்குப் பிறகு பென்ஷன் திட்டம் இருக்கிறது. இந்தப் பென்ஷன் திட்டம் அமலாக்கப்பட்டதற்குப் பிறகு பத்து ஆண்டுகள் பணியில் இருந்தால்தான் பென்ஷன் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அத்தகைய நபர்களுக்கு, பத்து ஆண்டுகள் முடிவுறாத நிலையில் இறந்துவிட்டவர்களின் குடும்பங்களுக்கு பென்ஷனை வழங்குவதற்கு அரசு ஆலோசிக்குமா என்றும், இது குறித்து அரசுக்கு முறையீடு எதுவும் வந்திருக்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இது குடும்பப் பாதுகாப்பு நிதி வழங்குகிற திட்டத்தைப் பற்றியதாகும். பென்ஷன் திட்டத்தைப் பற்றிக் கேள்வி வருகிறபோது இந்தத் துணைக் கேள்வி எழுந்தால் பதில் அளிக்க நானும் அந்த வசதிகளோடு வருவேன்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இறந்துவிடுவதால் ஆண்டு ஒன்றுக்கு அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தொகை 6 கோடிக்கு அதிகமாக வருகிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஊழியர்களிடத்தில் இதற்காக மாதா மாதம் அவர்களுடைய சம்பளத்திலிருந்து நாம் பிடித்தம் செய்யக்கூடிய தொகை வருடத்திற்கு சுமாராக எவ்வளவு வரும் என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது ஒரு ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டது. அப்போது 10,000 ரூபாய் தரப்பட்டது. பிறகு அது 20,000 ரூபாயாக கடந்த காலத்திலே உயர்த்தப்பட்டது. அப்போது மூன்று ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டது. 10,000 ரூபாய்க்கு ஒரு ரூபாய் என்று இது அறிமுகப்படுத்தப்பட்டபோது பிடிக்கப்பட்டது. அடுத்து வந்த ஆட்சியில் 20,000 ரூபாய்க்கு மூன்று ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டது. இப்போது 40,000 ரூபாய்க்கு ஐந்து ரூபாய் பிடித்தம் செய்யப்படுகிறது. இப்படி பிடித்தம் செய்வதன் மூலமாக அரசுக்கு கிடைக்கக்கூடிய வருவாய் 4.80 கோடி ரூபாய். அதாவது நான்கு கோடியே எண்பது லட்சம் ரூபாய். அதுவன்னியில் ஐந்து கோடியே இருபது லட்சம் ரூபாய் அரசுக்கு அதிகச் செலவு இந்தத் திட்டத்திற்காக ஏற்படுகிறது.

(9-10)

திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையிலுள்ள துப்புரவுத் தொழிலாளர்களும் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், இந்தத் திட்டம் அவர்களுக்கும் அமுல் நடத்தப்படுமா, அதுகுறித்த செயற்குறிப்பு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் எவராயினும் அவர்களுக்கு இந்தத் திட்டம் வாயிலாகப் பயனுண்டு.

1989 அக்டோபர் 31]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லும்போது, இந்தப் பணியிலே, நிரந்தரமாக இருக்கக் கூடியவர்கள் இறந்தால்தான் இந்தத் திட்டம் அவர்களுக்கு உண்டு என்று சொன்னார்கள். ஆனால் பல இலாக்காக்களிலே 340 நாட்கள் வேலை செய்தும்கூட அவர்கள் நிரந்தரமாக்கப்பட வில்லை. இன்னும் சில இலாக்காக்களிலே 10 ஆண்டுகள் கூட தற் காலிகமாக வேலை செய்கிறார்களே, அவர்கள் இறந்துவிட்டால், இந்த குடும்ப நல உதவித் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு உதவி செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, யார் யாரை நிரந்தரமாக ஆக்குவது என்பது வேறு பிரச்சினை. அப்படி அவர்கள் எல்லாம் நிரந்தரமாக ஆக்கப்படுவார்களே யானால், அவர்களுக்கு இந்தத் திட்டத்தால் பயன் உண்டு.

புதுடெல்லி தமிழ்நாடு இல்லம்.

* 4053 **திரு. ஆ. அறிவழகன் :**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் மத்திய தேர்வாணைய (UPSC) நேர்முகத் தேர்விற்காகச் செல்லும் மாணவர்களுக்கு சலுகைக் கட்டணத்தில் தங்கும் வசதி செய்து தரப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

(அ) ஆம்.

(ஆ) மத்திய தேர்வாணை (UPSC) நேர்முகத் தேர்விற் காக இந்த மாநிலத்திலிருந்து செல்லும் வேலையில்லா மாண வர்கள்/மற்றவர்கள் புதுடெல்லியிலேயுள்ள தமிழ்நாடு இல்லத்தில் மூன்று தினங்களுக்கு சலுகைக் கட்டணத்தில் தங்க வசதி செய்து தரப்படுகிறது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, புது டெல்லியிலே உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கு யார் யாருக்கு தகுதி இருக்கிறது என்பது குறித்து, விதிமுறைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS